மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ம் நாள் வியாழக்கிழமை

*******

திரு.ரெ.செந்தில்குமார், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கணேசன் | **அசல் வழக்கு எண்.** | - | 1/2024 |
| த/பெ. | - | ஆறுமுகம் | **வா.சா.** | - | 2 |
| வயது | - | 57 | | | |
| கிராமம் | - | சித்தலிங்கடம் | | | |
| வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் | | | |
| தொழில் | - | ஓட்டுநர் | | | |

22.01.2026

**1, 2 பிரிதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து தள்ளி 4 வீடு தள்ளி எனது வீடு உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எத்தனை வருடமாக உள்ளது என்றால் தாத்தா காலத்திலிருந்தே உள்ளது. அதனால் இந்த வழக்கு சொத்தை பொறுத்து தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் சின்னசாமிக்கு பாத்தியம் என்றால் சரிதான்.

2. சின்னசாமியின் வாரிசுகள் அண்ணாமலை, சாரங்கபாணி, நாராயணசாமி ஆகியோர்கள். இந்த மூன்று பேரும் கூர்சீட்டின் பேரில் 1928-ல் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அண்ணாமலை கவுண்டருக்கு மேற்சொன்ன கூர்சீட்டில் வழக்கு சொத்தில் பாகம் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். சாரங்கபாணி, நாராயணசாமி-கு மேற்சொன்ன கூர்சீட்டில் வழக்கு சொத்தில் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

3. சாரங்கபாணி தன்னுடைய பாகத்தை இரண்டாக பிரித்து அண்ணாமலைக்கும், நாராயணசாமிக்கும் இரண்டாக கொடுத்துவிட்டார் என்றால் ஆமாம். 1960 ல் அண்ணாமலை கவுண்டர் தன்னுடைய பாகத்தில் வந்த சொத்துகளை தன்னுடைய பிள்ளைக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான்.

4. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் சி ஷெட்யூலில் 2 3/4 செண்ட் பச்சையப்பன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். 1972 ல் அண்ணாமலை அவருடைய பிள்ளைகளுக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் 1972 ல் அண்ணாமலையும், அவருடைய பிள்ளைகளும் சேர்ந்து ஒரு பதிவு பாக பத்திரம் எழுதினார்கள் என்றால் சரிதான்.

5. அதில் டி பட்டியல் சொத்தில் பச்சையப்பனுக்கு 9 1/2 செண்ட் எழுதிகொண்டார்கள் என்றால் ஆமாம். யூடிஆர் காலக்கட்டத்தில் சர்வே செய்யும் போது 6 செண்ட் தான் பச்சையப்பன் கணக்கில் ஒதுக்கி அதன்படி பட்டா ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. சாரங்கபாணியின் பாகத்தை உடன் பிறந்த சகோதரரான அண்ணாமலைக்கும், நாராயணசாமிக்கும் பாதியாக கொடுத்துவிட்டார் என்றால் 9 1/2 செண்டில் 3 செண்ட் கொடுத்தது போக 6 1/2 செண்ட் பச்சையப்பனுக்கு உடையது. 3 செண்ட் பிரதிவாதிக்கு கொடுத்ததை காண்பிக்க எதாவது ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் கோர்டில் எல்லா ஆவணமும் கொடுத்துள்ளேன.

7. வாதிகளுக்கு 1960 கணக்கு படி 2 3/4 செண்ட் தான் பாத்தியம் என்றால் 6 1/2 செண்ட் வாதிகளுக்கு பாத்தியம். நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.
T.V.Nallur.